©
தமிழ்நாடு அரசு
2026

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண். 9] சென்னை, புதன்கிழமை, மார்ச் 4, 2026
மாசி 20, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2057

## பகுதி VI—பிரிவு 1 இன் இணைப்பு

### துறைத் தலைவர்களுடைய அறிவிப்புகள்

**1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் பிரிவு 44(1)—ன் கீழ் அறிவிக்கை**

*(ந.க. எண். 5473/இ1/2024)*

சங்கப்பதிவுச்சட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட Vanila Flat Owners Association பதிவு எண் 129/2017 என்ற சங்கமானது, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம் பிரிவு 16(3) (ஆ)ன் படி கோர்வை செய்ய வேண்டிய அறிக்கைகள் கடந்த 3 (மூன்று) ஆண்டுகளாக சங்கம் புதுப்பித்தலுக்காக கோர்வைக்கு தாக்கல் செய்யப்படாமல் உள்ளதால் பார்வையில் காணும் இவ்வலுவலக கடிதவழி 1975ம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம் பிரிவு 44(1)ன் கீழ் அறிவிப்பு அனுப்பப்பட்டது. சங்கங்களிடமிருந்து பதிலேதும் பெறப்படாத நிலையில் "*தமிழ்நாடு அரசிதழில்*" சங்கங்கள் பதிவுச்சட்டம் பிரிவு 44(2)ன் கீழ் அறிவிப்பு வெளியிடவும், இவ்வறிவிப்பு வெளியிட்ட மூன்று மாதங்களுக்குள் சங்கம் செயல்பாடு சம்மந்தமாகவும், தக்க விளக்கம் அளிக்கப்படவில்லையெனில் சங்கப்பெயர் சங்கப்பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யப்படும்.

| *வரிசை எண்* | *சங்கப் பெயர்* | *சங்கப் பதிவு எண்* | *முகவரி* |
|---|---|---|---|
| 1 | Vanila Flat Owners Association | 129/2017 | No. 37, Padavattamman Koil Street, Kazhipathur Village, Kelambakkam, Thiruporur Taluk, Kancheepuram District-603 103. |

செங்கல்பட்டு,
2026 ஜனவரி 30.

**ப. புனிதா**
*மாவட்டப்பதிவாளர் (நிர்வாகம்),*
*(உதவிப் பதிவுத்துறைத்தலைவர் நிலையில்).*

**1983–ம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 137(2)(பி)ன் கீழ் சங்கம் கலைத்தல் மற்றும் 138(1)-ன் கீழ் கலைத்தல் அலுவலர் நியமனம் செய்தல் பற்றிய அறிவிக்கை**

**வி.ஆர்.டி.1115 என். திருவேங்கிடபுரம் மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம்**

*(ந.க. எண். 2237/ஆ/2025–2)*

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டத்திலுள்ள வி.ஆர்.டி.1115 என்.திருவேங்கிடபுரம் மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் நடைமுறைகளை 1983–ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 137(2)(பி)–ன் கீழ் துணைப்பதிவாளர் (பால்வளம்) விருதுநகர் 2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06–ஆம் நாள் கலைத்து ஆணையிட்டு மேற்படி சட்டப்பிரிவு 138(1)–இன் கீழ் துணைப்பதிவாளர் (பால்வளம்), விருதுநகர் அலுவலகத்திலுள்ள கூட்டுறவு சார்பதிவாளர் (சட்டப்பணிகள்) விருதுநகர்–ஐ அச்சங்கத்தின் அதிகாரப்பூர்வமான கலைத்தல் அலுவலராக நியமித்துள்ளார்.

**வி.ஆர்.டி.1747 கட்டையதேவன்பட்டி மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம்**

*(ந.க. எண். 2238/ஆ/2025–2)*

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டத்திலுள்ள வி.ஆர்.டி.1747 கட்டையதேவன்பட்டி மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் நடைமுறைகளை 1983–ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 137(2)(பி)–ன் கீழ் துணைப்பதிவாளர் (பால்வளம்) விருதுநகர் 2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06–ஆம் நாள் கலைத்து ஆணையிட்டு மேற்படி சட்டப்பிரிவு 138(1)–இன் கீழ் துணைப்பதிவாளர் (பால்வளம்), விருதுநகர் அலுவலகத்திலுள்ள கூட்டுறவு சார்பதிவாளர் (சட்டப்பணிகள்) விருதுநகர்–ஐ அச்சங்கத்தின் அதிகாரப்பூர்வமான கலைத்தல் அலுவலராக நியமித்துள்ளார்.

விருதுநகர்,
2026 பிப்ரவரி 6.

**கி. சம்பத்,**
*துணைப்பதிவாளர் (பால்வளம்).*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.